(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(9).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, நவெம்பர் 18, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2011 திசெம்பர் 15, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1311/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 ஆகிய வருடங்களில்,

(i) மின்வலு, எரிசக்தி அமைச்சுக்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களின் சதுர அடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) இக் கட்டிடங்களுக்கான குத்தகைக்காலத்தையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) மின்வலு, எரிசக்தி அமைச்சு தொடர்பாக மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சுடன் தொடர்புடைய ஏதாவது அமைப்புகளுக்கு உரித்தில்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்குச் செலவுசெய்த மொத்தப்பணத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) ஏனைய வெளிவள சேவைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட வெளிவள சேவைகளுக்கு ஏற்பட்ட செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) பணியாட்களின் மொத்த எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1335/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த யுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் பெரும் அர்ப்பணிப்புச் செய்தனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அங்கவீனம் அடைந்ததனால் 12 வருட சேவைகாலம் பூர்த்தி அடைவதற்கு முன்னர் மருத்துவ காரணங்களினால் ஓய்வுபெற்றுள்ள, அங்கவீனத்துக்கான ஓய்வூதியத்தை மாத்திரம் பெறுகின்ற இராணுவத்தினருக்கும் 12 வருடத்துக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்ட இராணுவத்தினருக்குப் போன்று ஓய்வூதியம் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றது என்பதையும்;

(ii) இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அங்கவீனம் அடைந்ததற்கான ஓய்வூதியம் பெறுகின்ற படை வீரர்களுக்கு சேவை ஓய்வூதியம் செலுத்துவதை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன;

(ii) அந்த சேவை ஓய்வூதியத்தை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1484/ '11

கௌரவ அஜித் குமார,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1598/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் விதத்தில் ஒன்பது விளையாட்டரங்குகளை நவீனமயப்படுத்துவதற்கு அல்லது புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள பழைய விளையாட்டரங்குகள் அல்லது புதிய இடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு விளையாட்டரங்கிற்காகவும் ஏற்கெனவே உள்ள நிலப்பரப்பிற்கு மேலதிகமாக புதிதாகப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ள காணிகளின் அளவுகள் ஏக்கர்களில் வெற்வேறாக யாதென்பதைம்;

(ii) விளையாட்டரங்குகளை நவீனமயப்படுத்துவதற்காக அரசுக்குச் சொந்தமில்லாத தனியார் காணிகள் பெறப்படுமாயின், சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் காணித்துண்டுகளின் விலைமதிப்பீட்டுப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) அந்தக் காணிகளை வழங்குவதற்காக இவர்களின் சம்மதத்தைத் தெரிவிக்கும் சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1661/ '11

கௌரவ ஈ. சரவணபவன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் நாகர்கோவில் பிரதேசத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மூலமாக நன்மை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) 2010 ஆம் ஆண்டுக்கான பொருளாதார முன்னேற்ற அறிக்கைக்கிணங்க நாகர்கோவில் வர்த்தக பல்கூட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 5.8 மில்லியன் ரூபாவுக்கு என்ன நேர்ந்தது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1669/ '11

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் இயங்கிவந்த வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகள் யாவையென்பதையும்;

(ii) அக் கம்பனிகள் எந்த நாடுகளுக்கு சொந்தமானவை என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகள் இயங்கிவந்தமையின் காணமாக இந்நாட்டிற்கு ஏற்பட்ட தாக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) இக்கம்பனிகள் எந்த ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்டன என்பதையும்;

(v) இதன் பொருட்டு செயலாற்றிய அரசாங்கம் யாதென்பதையும்;

(vi) பெற்றோலியக் கம்பனிகள் அரசுடைமையாக்கப்பட்டதனால் இந்நாட்டிற்கு ஏற்பட்ட வெளிநாட்டுத் தாக்கங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி தாக்கங்களை தணிப்பதற்காக அப்போதைய அரசாங்கம் செயலாற்றிய விதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1701/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின்போது மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படும் பாடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடங்களுக்கும் வழங்கப்படும் சித்திகளின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் மேற்படி பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்குறித்த சித்திகள் வழங்கப்படும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் வரையறைகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் மேற்படி பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட ஒவ்வொரு சித்திகளின் எண்ணிக்கை மற்றும் சதவீதங்கள் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2011 திசெம்பர் 16, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0586/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சுதந்திரம் அடைந்தது முதல் ஏனைய நாடுகளுக்கு காணிகளை அன்பளிப்பாக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எத்தனை பேர்ச்சுகள் அல்லது ஏக்கர்கள் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அக் காணிகளை வழங்கியமைக்கான நோக்கம் என்னவென்பதையும்;

(iv) உள்நாட்டுக் காணிகள் வழங்கப்பட்ட அத்தகைய நாடுகளிடமிருந்து அதையொத்த காணிகளை இலங்கை பரஸ்பரம் பெற்றுக்கொண்டதா என்பதையும்;

(v) ஆமெனில், பெற்றுக்கொண்ட காணிகளின் பரப்பளவு, திகதி, நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1204/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்குள்ளே சட்ட விரோதமாக எடுத்து வந்த வேளையில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் (ஹெரொயின் போன்றவை) அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத போதைப் பொருட்களை இந்நாட்டுக்கு வரைவழைத்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சட்ட விரோத போதைப்பொருட்களை எடுத்துவரல் சம்பந்தமாக ஓர் ஆளிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ அறவிடப்பட்ட அபராதத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி போதைப்பொருட்கள் வரவழைக்கப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1360/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொது வசதிகள் சபை கொழும்பு மாவட்டத்தில் மாளிகாவத்தை மாடி வீட்டுத் தொகுதியை உரிய முறையில் பராமரிக்காததன் காரணமாக அதில் வசிப்பவர்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீட்டுத் தொகுதியை உரிய முறையில் பராமரிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பராமரிப்பு வேலைகளை துரிதமாக ஆரம்பித்து இவ்வீடுகளில் வாழும் மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1485/ '11

கௌரவ அஜித் குமார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1662/ '11

கௌரவ ஈ. சரவணபவன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சினால் 2010 யூன் மாதத்தின் பின்னர் வட மாகாணத்தில் உளவியல் மருத்துவத்துடன் தொடர்புடையதாக எவையேனும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(ii) அவ்வாறாயின் அத்தகைய செற்பாடுகள் தொடர்பான தகவல்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு யூன் மாதத்தின் பின்னர் வட மாகாணத்தில் தற்கொலை வீதம் அதிகரித்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) வட மாகாணத்தில் தற்கொலைகள் அதிகரித்துள்ளமை தொடர்பான தகவல்கள் யாவை;

(ii) தற்கொலைகள் அதிகரிக்கும் போக்கை தடுக்க விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின் அவை யாவை;

(iv) அவ்வாறான விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1670/ '11

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர் எண்ணிக்கையில் பல்கலைக்கழக அனுமதிபெறத் தகைமைபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையிலும் ஒவ்வொரு மொழிமூல அடிப்படையிலும் யாது;

(ii) பல்கலைக்கழகத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஏதேனும் வழிமுறையை மேற்கொள்ள கருதியுள்ளாரா;

(iii) ஆமெனில், அவ்வழிமுறை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகளில் அனுமதிக்கப்படுவதற்கான புலமைப்பரிசில் திட்டமொன்றோ அல்லது வேறு வழிமுறையொன்றோ தற்போது நடைமுறையில் உள்ளதா;

(ii) ஆமெனில், அது யாது

என்பதை இவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நடவடிக்கைள் யாவை

என்பதை இவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1702/ '11

கௌரவ அனுர திசாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) 2011 ஆம் ஆண்டில் டெங்கு நோயினால் உயிரிழந்த நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) டெங்கு கொள்ளைநோயை ஒழிப்பதற்காக கியூபாவிலிருந்து பக்ரீரியா வகையொன்று வரவழைக்கப்பட்டதா;

(iv) அவ்வாறெனின் அது உரிய காலத்திதினுள் வரவழைக்கப்பட்டதா;

(v) கியூயுபாவிலிருந்து வரவழைக்கப்படுகின்றபோது அவை பாவனைக்குத் தகாத நிலைக்குட்பட்டதா;

(vi) அவ்வாறெனின் அது சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2011 திசெம்பர் 17, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1064/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதித் திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1313/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெஹிவளையில் அமைந்துள்ள விலங்கினக் காட்சிச்சாலையினை பின்னவலவுக்கு எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(iii) ஏற்கனவே அக்காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) தெஹிவளையில் அமைந்துள்ள விலங்கினக் காட்சிச்சாலையினை பின்னவலவுக்கு மாற்றும் பொருட்டு செலவிட எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(v) மேற்படி இடமாற்றத்தை மேற்கொள்வதில் தாக்கமேற்படுத்திய காரணங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தேச விலங்கினக் காட்சிச்சாலையின் இடமாற்றம் தற்போது பழக்கப்பட்ட சுற்றாடல் நிலைமையைப் பார்க்கிலும் வித்தியாசமான நிலைமைக்கு விலங்குகளை இட்டுச் செல்ல காரணமாக அமையுமென்பதையும்;

(ii) இந்நிலைமை காரணமாக விலங்கினக் காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளின் வாழ்க்கை இடர் நேர்வுக்கு இலக்காகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) விலங்கினக் காட்சிச் சாலையின் இடமாற்றம் காரணமாகத் தோன்றுகின்ற மேற்படி இடர் நேர்வு நிலைமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1361/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் யக்கலமுல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் காலி ஹிரிம்புராவ கனிஷ்ட பாடசாலை சுமார் ஐந்து வருட காலமாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது இப்பாடசாலைக்குச் சொந்தமான சகல கட்டிடங்களும் சிதைவடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஹிரிம்புராவ கனிஷ்ட பாடசாலையை இவ்வாறு மூடிவிடுவதற்கான காரணம் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) காலி, ஹிரிம்புராவ கனிஷ்ட பாடசாலையை மறுசீரமைத்து பிரதேசத்தின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின் இப்பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படம் திகதி யாது;

(iii) இன்றேல் வேறு பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கு இப்பாடசாலையைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1487/ '11

கௌரவ அஜித் குமார,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் சேவைகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1667/ '11

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் இயங்கிவந்த வெளிநாட்டு வானொலி சேவைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றின் மூலம் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட தாக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வானொலி சேவைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில் அதன் பொருட்டு செயற்பட்ட அரசாங்கம் யாதென்பதையும்;

(v) மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்வரும் காலத்தில் வெளிநாட்டு வானொலி சேவைகளை இலங்கையில் பேணிவருவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எந்த அடிப்படையில் அத்தகைய அனுமதி வழங்கப்படும் என்பதையும்;

(iii) அத்தகைய அடிப்படையிலிருந்து செயற்படுவதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1703/ '11

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலிய கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவெல — ஆழ் கடலில் எண்ணெய்க் குழாய்களை இடும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா;

(ii) அவ்வாறெனின் அந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் என்ன;

(iii) அந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற கம்பனியை தெரிவு செய்கின்றபோது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா;

(iv) அவ்வாறெனின் அதற்கான விலைகளை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் ஒவ்வொரு கம்பனியினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் யாவை;

(v) அக் கருத்திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசித்துள்ள திகதி யாது

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1715/ '11

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பேலியகொட நான்காம் கட்டையிலிருந்து பியகம வீதியின் களனிய பன்சாலை வரையான வீதியை விஸ்தரிக்கும் கருத்திட்டத்துக்காக அவ்வீதியின் இரு புறங்களிலும் அமைந்துள்ள வீடுகள் மற்றும் சுற்று மதில்கள் எவ்வித நட்ட ஈட்டுத் தொகையும் செலுத்தப்படாது பலவந்தமாக உடைக்கப்படுவது தொடர்பாக அப்பிரதேச மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதியை விஸ்தரித்தல் போன்ற தேசிய ரீதியிலான தேவையொன்றின் நிமித்தம் சுவீகரிக்கப்படுகின்ற காணிகளுக்காக நியாயமான நட்ட ஈட்டுத்தொகையொன்றை பெற்றுக்கொள்வதற்கும், வழங்கப்படும் நட்ட ஈடு தொடர்பாக திருப்தி அடையாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட சொத்துடைமையாளர்களுக்கு உரிமை உள்ளதென்பதையும்;

(ii) மேற்சொன்ன வீதி விஸ்தரிப்புப் பணியின் போது மக்களின் எந்தவொரு உரிமைக்கும் மதிப்பளிக்காமலும், முன்னறிவித்தலின்றியும் இராணுவம் மற்றும் பொலிசாரை ஈடுபடுத்தி வீடுகள், சுற்று மதில்களை உடைத்தெறிவதானது, அமுலில் உள்ள சட்டத்துக்கு முரணாக அரச அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) மேற்படி கருத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பாதிக்கப்படும் தரப்பினர்களுக்கு நியாயமான நட்டஈட்டுத் தொகையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 19, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1063/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1488/ '11

கௌரவ அஜித் குமார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்வலு, எரிசக்தி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1555/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்திலுள்ள மொத்த மற்றும் சில்லறை மீன் விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவ்விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களில் சென்ற் ஜோன் மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் யாவை;

(ii) சென்ற் ஜோன் மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றிருக்காவிடினும் பேலியகொடை புதிய மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் யாவை;

(iii) இவர்களுக்கு இவ்வாய்ப்பை வழங்குவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1569/ '11

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தால் நிர்வகிக்கப்படுகின்ற ஊருபொக்க கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள ஆசிரிய விடுதி தூர இடங்களிலிருந்து சேவைக்கு சமூகமளிக்கின்ற ஆசிரியர்களுக்கு விடுதி வசதியை வழங்குகின்றதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி ஆசிரியர் விடுதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் புனரமைப்பு நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1730/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு பேணிவரப்படுகின்ற கட்டிடத்தின் உரிமை அரசாங்கத்திற்கு சொந்தமானதா என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுக் கட்டிடம் 2010 அல்லது 2011 ஆம் ஆண்டில் சீர்திருத்தப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், இக்கட்டிடத்தின் எப்பகுதிகள் புனரமைக்கப்பட்டன என்பதையும்;

(iv) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(v) அக்கம்பனியை தெரிவுசெய்வதற்கு பின்பற்றப்பட்ட முறைமையியல் யாதென்பதையும்;

(vi) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1736/ '11

கௌரவ பாலித ரங்கே பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் 2009ஆம் ஆண்டில் லொத்தர் விற்பனையொன்று நடத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி லொத்தருக்காக அச்சிடப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதில் விற்பனை செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி லொத்தர் விற்பனையின் மூலம் கிடைத்த மொத்த வருமானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி லொத்தர் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட சீட்டிழுப்பு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதில் வெற்றியீட்டியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) சீட்டிழுப்பு நடத்தப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரையில் சீட்டிழுப்பு நடாத்தப்படாமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1845/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம் அஸ்வர்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்செய்கையை விருத்தி செய்வதற்காக கிராமிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2011 திசெம்பர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1209/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இதுவரை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நிதி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட்டுள்ள பதிவு செய்யப்படாமல் பேணிவரப்படுகின்ற நிதி நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இந்த பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1308/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011 ஆண்டுகளில்,

(i) சுகாதார அமைச்சிற்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதற்கு ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களின் சதுரஅடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) கட்டிடங்களின் குத்தகைக் கால அளவையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சின் எந்தவொரு நிறுவனத்திற்கும் உரித்தல்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தககைக்கு அமர்த்தியதில் ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(iii) வெளி வளங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(iv) மேற்படி வெளிவள சேவைகளுக்கான செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) மொத்த பணியாளார் தொகையையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1495/ '11

கௌரவ அஜித் குமார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விளையாட்டுத்துறை அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1584/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொனறாகலை மாவட்டத்தில் மொனறாகலை — வெல்லவாய பிரதான நெடுஞ்சாலையில் கும்புக்கன கங்காராம விஹாரைக்கு பக்கத்தில் ஓடுகின்ற அருவிக்கு குறுக்காக அமைக்கப்பட்டிருந்த பாலத்தை அகலமாக்குவதற்காக உடைக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் அதன் நிர்மாணப் பணிகள் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(ii) அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு

என்பதை அவர் அறிவிப்பாரா

(இ) (i) இப் பாலத்தை நிர்மாணிப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(ii) அவ்வாறெனின் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் எவை;

(iii) அந்தந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைக்கள் யாவை;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனம் மற்றும் ஏற்புடைய விலைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பபிடுவாரா?

(ஈ) (i) இப் பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா;

(ii) வெளிநாட்டு உதவிகள் முலம் பெறப்பட்டதெனில், அந்த நிதி உதவியை வழங்கிய நாட்டின் பெயர் யாது

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1733/ '11

கௌரவ அனுர திசாநாயக்க,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் தற்போதைய உற்பத்திக் கொள்ளளவு எவ்வளவு;

(ii) திறந்து வைக்கப்பட்ட திகதி தொடக்கம் மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுகின்றதா;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டு அல்லது செயலிழந்திருந்த நாட்கள் எவ்வளவு;

(iv) மேற்படி நிலமைக்குக் காரணமாயிருந்த விடயங்கள் யாவை

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1814/ '11

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில், பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் 2011.07.05ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதென்பதையும்;

(ii) அப்போது, மேற்படி பிரதேச சபையின் புதிய ஆளும்தரப்பினர் சத்தியப்பிரமாணம் செய்திருக்கவிலையென்பதால் விசேட ஆணையாளராக அதிகாரமளிக்கப்பட்டிருந்த பிரதேச செயலாளரின் பொறுப்பின் கீழ் அந்த அங்குரார்ப்பணம் நடைபெற்றது என்பதையும்;

(iii) புதிய ஆளும்தரப்பினர் சத்தியப்பிரமாணம் செய்திராத ஒரு சந்தர்ப்பத்தில் மேற்படி அங்குரார்ப்பண வைபவத்தை நடத்தியமையானது பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அதனை ஒத்திவைக்குமாறு வழங்கிய அறிவுறுத்தல்கள் கவனத்தில் கொள்ளப்படாமையாகும் என்பதையும்

அவர் அறிவரா?

(ஆ) (i) அமைச்சின் செயலாளர் ஒருவரினால் எவரேனுமொரு பிரதேச செயலாளருக்கு விடயப்பரப்பிற்கு அமைவாக வழங்கப்படும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாமல் செயற்படுவதற்கு அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்கூறியவாறு செயற்பட்டுள்ள திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1844/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறப்பர் பயிர்ச் செய்கையை முன்னேற்றுவதற்காக சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு மானியம் வழங்கும் செயற்பாடொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன் கீழ் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2011 திசெம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0562/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஒப்பந்தக்காரர்களின் பெயர்களையும்,

(ii) கேள்வி பத்திர செயன்முறை மூலமாகவா மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்,

(iii) அவ்வாறாயின், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்களையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது எப்போது ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்பதையும்,

(ii) அதற்கு எவ்வாறு நிதியிடப்படும் என்பதையும்,

(iii) வட்டி மற்றும் நிர்மாணச் செலவு ஆகியவற்றினடிப்படையில் மொத்தச் செலவினையும்,

(iv) அடுத்த 6 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் எதிர்வு கூறலையும்,

(v) மூலதனச் செலவு மற்றும் வட்டிச் செலவு, ஏனைய இயக்குச் செலவுகள் மற்றும் அடுத்த 10 வருடங்களுள் பெறப்படவுள்ள வருமானம் ஆகியவை உள்ளிட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை வருட அடிப்படையிலும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்ட நிர்மாணச் செலவுகளுக்க எடுத்த கடனை மீளச் செலுத்த கொழும்புத் துறைமுகத்தின் வருமானம் பயன்படுத்தப்படுமா என்பதையும்,

(ii) கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டிய திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1362/ '11

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொட சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கரந்தன சுகாதார நிலையக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக ஒரு பகுதி உடைக்கப்பட்டு மீண்டும் அத்திவாரமிடப்பட்டிருப்பினும், எஞ்சியுள்ள நிர்மாணப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இச்சுகாதார நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இச்சுகாதார நிலையத்தின் நிர்மாணப் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின் அத்தொகை யாது;

(iv) நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமெனின், அத் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1496/ '11

கௌரவ அஜித் குமார,— தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1557/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே தின விழாவில் கலந்து கொண்டோரின் போக்குவரத்துக்காக ஒவ்வொரு இ.போ.ச. டிப்போவில் இருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்ட பஸ் வண்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இதற்காக ஒவ்வொரு டிப்போவுக்கும் அரசாங்கம் செலுத்தியுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) இந்த பஸ் வண்டிகளுக்கு பணம் செலுத்தப்படவில்லையாயின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு மே தின விழாவுக்கு அரசாங்கம் இ.போ.ச.விலிருந்து பெற்றுக்கொண்ட பஸ் வண்டிகளுக்கான பணம் தற்பொழுது செலுத்தி முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1613/ '11

கௌரவ ஈ. சரவணபவன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிளிநொச்சி கல்வி வலயத்தில் சேவையாற்ற வேண்டிய கல்வி நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது கிளிநொச்சி கல்வி வலயத்தில் சேவையாற்றும் கல்வி நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கல்வி வலயத்தில் தற்போது நிலவுகின்ற கல்வி நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி கல்வி வலயத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் I, II மற்றும் III ஆம் தர அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் I, II மற்றும் III ஆம் தர அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் தொகையின் பிரகாரம் இருக்க வேண்டிய ஒவ்வொரு தரத்திலுமான அதிபர்களின் எண்ணிக்கையை மேற்படி கல்வி வலயத்துக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1804/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாப்பிட்டிய, கோன்கஹகெதர தொடக்கம் பூகல்ல வரையிலான வீதியில் 'காபட்' இடுவதற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்த வீதியில் காபட் இடுவதற்கான கருத்திட்டத்தின் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்த ஒப்பந்தகாரர்கள் யாவர் என்பதையும்;

(iv) இந்த ஒவ்வொரு ஒப்பந்தகாரரினாலும் முன்வைக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1909/ '11

கௌரவ ரஞ்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற பெரும்பாலான ஊழியர்களுக்கு அந்நாடுகளில் அமுலில் உள்ள ஷரிஆ சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான அறிவு இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக, வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடும்போது இவர்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய கிழக்கு நாடுகளின் சட்டங்கள் தொடர்பில் அறிவின்மை காரணமாக அந்நாடுகளின் சட்டங்களின் கீழ் குற்றவாளியாக்கப்படுகின்ற இலங்கை ஊழியர்களுக்கு சட்ட உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி மேற்படி ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அத்தகைய வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்ற திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?